இலங்கையில் உயர்கல்வியில் ஆற்றுகைக்கலைகள்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கக்கலைகளும் கற்கைநெறி ஒரு மீள்பார்வை

க.நவதர்ஷனி

நாடகமும் அரங்கக்கலைகளும் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

navadharshanik@univ.jfn.ac.lk

ஆய்வுச்சுருக்கம்

*நாடகமும் அரங்கக் கலைகளும் நீண்டகாலமாக பயிலப்பட்டுவரும் கல்வி முறைகளிலொன்று. பாரம்பரியமாக இந்தக் கல்வி குருகுல மரபு மற்றும் குலமரபு முறையில் பயிலப்பட்டு வந்தது. காலனித்துவ காலத்தில் ஏனைய கல்வி முறையில் ஏற்ப்பட்ட மாற்றங்களைப் போன்று அரங்கக் கலைகளைப் பயிலுதலிலும் மாற்றம் ஏற்ப்பட்டது. **1948** ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், உயர்தரவர்க்கம் மற்றும் மத்தியதரவர்க்கம் என்பவற்றின் உருவாக்கம் இந்தக் கலைப் பயிற்சியை உள்ளடக்கியது. இது தேசியவாதத்தற்கும் பங்களித்தது. தமிழ்நாட்டில் பயில்வதற்காக நிறுவப்பட்ட கலாசேத்திரா, அடையாறு இசைக்கல்லூரி போன்ற கல்வி நிறுவனங்களில் மத்தியதர வர்க்கத் தமிழர்கள் இசை, நடனம் பயில்வதற்காகச் சென்றனர். இவர்கள் கற்கையை நிறைவு செய்த பின்பு, இலங்கைக்குத் திரும்பினார்கள். இவர்கள் தனிப்பட்ட முறையிலும் கல்வி நிறுவனங்களிலும் செயன்முறை வகுப்புகளை நடாத்தத் தொடங்கினர். நாடகக் கல்வி ஏனைய அழகியற் பாடங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தது. நாடகம் பனுவலை அடிப்படையாகக் கொண்டு கற்கப்பட்டது. மேற்தட்டு வர்க்கத்தினர் இங்கிலாந்தில் நாடகப் பயிற்சியை பெற்று கொழும்பில் பயிற்சி நிறுவனங்களை ஆரம்பித்தனர். இதன் மூலம் பல்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களையும் வளவாளராக உருவாக்குவதற்கு பங்களிப்பு செய்துள்ளனர். அரங்கக் கலைகளின் செயன்முறைப் பயிற்சிகளும் நாடகத்தயாரிப்புகளும் உருவாகுவதற்கு பங்களித்துள்ளனர். இந்த வளவாளர்கள் உள்ளூர் மற்றும் மேலைத்தேய மரபுகளை இணைத்து நாடகங்களைத் தயாரித்ததன் மூலம் தேசிய அரங்க உருவாக்கத்திற்கு பங்களித்துள்ளனர். இத்தகைய பின்னணியில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கக் கலைகளும் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டபோது **(1986)** செயன்முறையை விடவும் கோட்பாடுகளிலும் வரலாற்றைக் கற்ப்பதிலும் கவனம்*

செலுத்தப்பட்டது. காலத்திற்குக் காலம் நாடகமும் அரங்கக் கலைகளும் கலைத்திட்டம் மறுசீரமைப்பு செய்யப்பட்டபோது செய்முறைப் பாடங்களின் தரம் அதிகரிக்கப்பட்டது. இந்த ஆய்வு ஆற்றுகைக் கலைகளின் கல்வியின் வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியில் அரங்கக்கலைகளின் கல்வி தொடர்பாக விவாதிப்பதோடு நாடகமும் அரங்கக் கலைகளும் கலைத்திட்டத்தையும் மீள்பார்வை செய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

திறவுச் சொற்கள் - நாடக அரங்கக் கலைகளின் கல்வி, நாடக அரங்கக் கலைகள் கலைத்திட்டம், செயன்முறைப் பயிற்சி, கலைத்திட்ட உருவாக்கம், தேசியவாதம்

அறிமுகம்

தென்னாசியாவில் உயர்கல்வி நிறுவனங்களிலும் ஏனைய கல்விப் புலங்களிலும் ஆற்றுகைக் கலைகள் பாடத்துறையாக அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் அவை குலமரபு மற்றும் குருகுல முறையில் கற்பிக்கப்பட்டும், ஆற்றுகை செய்யப்படும் கலை வடிவங்களாக இருந்து வந்தன. காலனித்துவ ஆக்கிரமிப்பின் இடையீடு பாரம்பரியமாக ஆற்றுகைக் கலைகளைப் பயிலும் முறையில் பாரிய தாக்கம் செலுத்தியது. காலனித்துவக் கல்வி முறையினால் புதிதாக உருவாக்கம் பெற்ற உயர்தர மற்றும் மத்திய தரவர்க்கமே ஆற்றுகைக் கலைகளின் நவீன கல்வி நிறுவனங்களை நிறுவினர். இவர்களே நிறுவன ரீதியான கற்கை நெறிகளதும் ஆற்றுகைகளதும் முன்னோடிகளாக செயற்பட்டனர். மத்தியதர வர்க்கத்தினர் தமது கலை அடையாளங்களாக நவீன கலை வெளிப்பாடுகளை வரித்துக் கொண்டனர்.

இலங்கையில் இசை, நடனம் என்பவை இந்தியாவின் நவீன கலை நிறுவனங்களை முன் மாதிரியாக் கொண்டு நிறுவப்பட்டன. ஓவியம் மற்றும் நாடகம் ஐரோப்பிய மாதிரிகளை அடியொற்றியனவாக உருவாக்கப்பட்டன. இந்தக் கலைப் பாடங்கள் பட்டறிவுடன் கற்கும் பாரம்பரியக் கல்வி முறையிலிருந்து மாறுபட்ட கலைப் பயில்வு முறையாக நவீன கல்வி நிறுவனங்ளில் அறிமுகப்படுத்தப்பட்டன.

சுதேசியக் கலை வடிவங்கள் பற்றிய சிந்தனை, இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பிருந்தே பண்பாடுசார் நிகழ்வுகளுக்கூடாக பல்வேறு வகையில் ஊட்டப்பட்டு வந்தது. நாட்டு வளம், நாட்டின் பெருமைகள் என்பனவற்றை கலை இலக்கியங்களூடாக பேசுதல்,

பண்பாடுசார் விழாக்களைக் கொண்டாடுதல் என்ற வகையில் சுதேசியம் பற்றிய உணர்வு ஏற்ப்படுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் 'தேச நிர்மாணத்தில்' கலைகளின் பங்கும் இன்றியமையாது இருந்தன. இந்தக் கலைப் பயில்வுகளின் ஒரு பகுதியாகவே கலைத்துறை சார்ந்த பயிற்சிகளும் பாடத்துறைகளும் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டன. மறுமலர்ச்சி மீதான ஈடுபாடாகவும் காலனித்துவத்தின் எதிர்ப்பு நிலையாகவும் மத்தியதர வர்க்கம் இந்தக் கலைப் பயில்வுகளை வரித்துக் கொண்டது.

இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னரான காலப் பகுதியில் சுயமொழிக் கல்வியின் அறிமுகமும் உள்ளூர் அறிஞர்களின் பங்களிப்பும் நிறுவனங்களில் கலைப் பயிற்சிக்கு களம் அமைத்துக் கொடுத்தன. இலங்கையில் ஆற்றுகைக் கலைகளின் நவீன நிறுவனமயப்பட்ட கல்வி முறையின் வரலாற்றுப் பின்னணியில், குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கக் கலைகளும் கற்கைநெறி தொடர்பாக இவ் ஆய்வு கவனம் செலுத்துகிறது.

இலங்கையில் ஆற்றுகைக் கலைகளின் உயர்கல்வி - வரலாற்றுப் பின்புலம்

*உயர் கல்வி நிறுவனங்களில ஆற்றுகைக் கலைகள் கற்கைத் துறையாக அறிமுகமாவதற்கு முன்னர் தமிழ் மரபில் இசை, நடனம், நாடகம் என்பவை கலைச் செழுமை மிக்க பின்புலங்களைக் கொண்டிருந்தன. ஆற்றுகைக் கலைகளைப் பொறுத்தவரையில், உள்ளூர், தனி நபர்களின் முன்னெடுப்புகளாலேயே கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. கலை, பண்பாட்டுத் தேசியவாதத்தைப் பிரதிபலிக்கும் நோக்கில் ஆற்றுகைக் கலைகளின் கற்கை, பயிற்சி முறைகள் உயர் மற்றும் மத்தியதர வர்க்கத்தினரால் ஆதரிக்கப்பட்டு வந்தன. கல்வி மற்றும் உயர் கல்வித் துறையில் பாடத் துறைகளாக இலங்கையில் ஆற்றுகைக் கலைகள் அறிமுகப்படுத்தப்பட்ட வரலாற்றினை உரு-**1** (பின்னிணைப்பை பார்க்க) விவரிக்கிறது.*

***1934** இல் ரவீந்திரநாத்தாகூரின் இலங்கைக்கான வருகை, குருகுல முறையாகவும் குலமுறையாகவும் கற்ப்பிக்கப்பட்ட ஆற்றுகைக் கலைகளில் செல்வாக்குச் செலுத்தியது. இந்தியாவின் சுதேச மரபுகளை மேம்படுத்துவதற்கு தாகூரால் 'சாந்தினிகேதன்' நிறுவப்பட்டது. கலைகளின் நிறுவன ரீதியான கற்கை நெறிகள் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படுவதற்கு இவரது உரை முக்கிய உந்து சக்தியாக*

அமைந்தது. இவரது பேச்சுகளால் ஈர்க்கப்பட்டு கலைகளைக் கற்பதற்காக இலங்கையின் தென்பகுதியிலிருந்து பெரும்பாலானோர் சாந்தினிகேதனிற்குச் சென்றார்கள். தாகூர் இலங்கைக்கு வந்தபோது 'சிறிபாளி நிறுவனம்' அமைப்பதற்கான அடிக்கல் நாட்டினார் (சனாதனன்,2021) என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டுடன் பண்பாட்டுத் தொடர்புடைய தமிழர்கள் கலாசேத்திரா, அடையாறு இசைக் கல்லூரி, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்ற இடங்களிற்கு கலைகளைக் கற்பதற்காகச் சென்றார்கள். தமிழர்கள் தமிழ்நாட்டிற்கும், சிங்களவர்கள் வட இந்தயாவிற்கும் சென்று கலைகளைக் கற்றுக் கொண்டனர். மிகச் சிலர் இருபகுதிகளுக்கும் சென்று கற்றனர். இன ரீதியான தேச உணர்வின் வெளிப்பாடாக இந்த நடவடிக்கைகள் இருந்தன. இவ்வாறு கலைகளைக் கற்று வந்தவர்களாலேயே ஆற்றுகைக் கலைக் கல்வி நிறுவனங்கள் நிறுவப்பட்டன.

சுதந்திரத்திற்கு முற்பட்ட இலங்கையில் இந்தியக் கலைஞர்கள் நகரங்களில் கலை நிகழ்வுகளை நிகழ்த்துவது வழமையாக இருந்தது. கலைப்புலவர் நவரத்தினம் (யாழ்ப்பாணம்) அவர்களுடைய மனைவி **1928** இல் சாந்தினிகேதனில் கற்றார். அவரால் யாழ்ப்பாணத்தில் இசை கற்கும் மரபு அறிமுகப்படுத்தபட்டது. **1931** இல் வட இலங்கை சங்கீதசபை **(North Celon Orental Music Society - NCOMS)** நிறுவப்பட்டது. இசை, நடனம் ஆகிய பாடங்களின் கற்கைகள் வளர்சியடைந்தன. ரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிதிகேதனைப் பின்பற்றி **1956** இல் பண்டிதர் வீரகத்தி 'வாணி கலைக் கழகத்தைக் கரவெட்டியில் நிறுவினார். இங்கு இசை, நடனம், நாடகம், ஓவியம் என்பன கற்பிக்கப்பட்டன. வாணி கலைக் கழகத்தின் ஆறாவது ஆண்டு நிறைவு மலர் இந்நிறுவனத்தை "ஈழத்தின் இலட்சிய சாந்திநிகேதன்" எனக் குறிப்பிடுவது இங்கு கவனிக்கத்தக்கது **(சனாதனன், 2018:136).**

சுதேச பண்பாடு, கலைகளின் வளர்ச்சியினை இலட்சியமாகக் கொண்டு **1960**களில் இராமநாதன் நுண்கலைக்கழகம் நிறுவப்பட்டது. சேர். பொன் இராமநாதனின் மருமகன் சு. நடேசபிள்ளை இதன் தலைவராக இருந்தார். இந்தியாவில் கல்வி கற்றவர்களே இங்கு விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டனர். கலைப் பயில்வினை மேலும் மெருகேற்றும் வகையில் இந்தியாவிலிருந்து மகாராஜபுரம் சந்தானம் (வாய்பாடு), இராமநாதன் (மிருதங்கம்) போன்ற கலைஞர்கள் இராமநாதன் நுண்கலைக்கழகத்திற்கு வரவழைக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இசைத்துறையில் ஈடுபாடு கொண்டவர்கள் தனி

வகுப்புகள் மூலம் கலைத் திறனை மேலும் விருத்தி செய்து கொண்டனர்.

*தமிழ்நாட்டிலும், இராமநாதன் நுண்கலைக்கழகத்திலும் பயிற்சி பெற்றவர்கள் கலை மன்றங்களை நிறுவி, தனிப்பட்ட முறையில் பயிற்சிகளை வழங்கியும் ஆற்றுகைகளையும் நிகழ்த்தினர். இசை விழாக்களை நடாத்தினர். உள்ளூர் மக்களின் பொருளாதார ஆதரவினாலும் கலை ரசனையாலும் முன்னெடுக்கப்பட்டன. அரசினால் சுதேச பண்பாட்டு பணிகளிற்கான ஆதரவு போதிய அளவு வழங்கப்படவில்லை. **1960**களில் இந்தியக் கலைஞர்களின் வரவு இலங்கை அரசினால் தடை செய்யப்பட்டது. இந்தியக் கலை நிகழ்ச்சிகளிற்கு மாற்றீடாக உள்ளூரில் கலை நிகழ்ச்சிகள் ஊக்கம் பெற்றன.*

***1972** இல் இலங்கையில் நடைபெற்ற கல்விச் சீர்திருத்தத்தில், அழகியல் பாடங்களான பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்கள் பாடசாலைக் கலைத்திட்டத்தில் **(curriculum)** இணைத்துக் கொள்ளப்பட்டன.*

இலங்கையில் ஆற்றுகைக் கலைகளின் கற்கைநெறி – நாடகமும் அரங்கக்கலைகளும்

*காலனித்துவத்தின் தாக்கத்தினால் ஏற்பட்ட சமூக மாற்றங்களுக்கு ஏற்ப, நவீன நிறு வனங்களால் பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம் ஆகியன உள்ளூர்ப் பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்ட நியம முறையான பயிற்சியாக வளர்த்தெடுக்கப்பட்டது. மாறாக நாடகம் நிறுவனக் கல்விப் பாரம்பரியத்தினுள் அறிமுகமாகும் முறைமை வேறுபட்டிருந்தது. ஆங்கிலக் கல்வி வழியாக ஆங்கில இலக்கியங்களைக் கற்றலின் ஒரு பகுதியாகவே **19** ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில், கிறிஸ்தவ மிசனரிப் பாடசாலைகளில் (**Chistian missionary schools)** நாடகம் அறிமுகப்படுத்தப்பட்டது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் லண்டன், கல்கத்தா பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு கற்கைகளுக்கான கற்பித்தலில் ஆங்கில இலக்கியத்தின் ஒரு பகுதியாக நாடகப் பனுவல்கள் கற்பிக்கப்பட்டன. இடைநிலைக் கல்வி, உயர்கல்வித் துறையில் இருநூறு வருட வரலாறு கொண்டது நாடகக் கல்வி.*

*இலங்கையில் **1922** ஆம் ஆண்டு சிலோன் பல்கலைக்கழக கல்லூரியிலும் **(Ceylon University College)**ஆங்கில இலக்கியங்கள் கற்ப்பித்தலின் ஒரு பகுதியாக ஆங்கில நாடகப் பனுவல்கள்*

*கற்பிக்கப்பட்டன. இந்தக் காலப்பகுதி இலங்கையில் உயர் கல்வித்துறையில் நாடகக் கற்கைநெறி ஆரம்பித்த காலம் எனலாம். இத்துறையில் இயங்கிய 'றம்ஸ்சொக்' **(DRAMSOC);** எனும் அமைப்பு ஆங்கில நாடகங்களைத் தயாரித்தது. பேராசிரியர் ஈ.எப்.சி. லுடோவிக் **(1906-1985)** இக்காலப் பகுதியில் ஆங்கிலத்துறையின் தலைவராக இருந்தார். பின்பு சிலோன் பல்கலைக்கழக கல்லூரி, பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு இடம் மாற்றப்பட்டபோது ஆங்கில இலக்கித்துறையில் 'டிறம்சொக்' நாடகக் குழுவின் நாடகத் தயாரிப்பு வேலைகள் தொடர்ந்தன. இங்கு தயாரிக்கப்பட்ட நாடகங்கள் ஆங்கில நாடக இலக்கியங்களை விளங்கிக் கொள்வதற்கு உதவியாகவும் இருந்தது. பேராசிரியர் ஈ.எப்.சி. லுடோவிக் அவர்களைத் தொடர்ந்து ஆங்கிலத்துறையின் தலைவராக இருந்தவர் பேராசிரியர். ஆசிலி கல்பே **(1933-1916).** இவர் நாடகம் தயாரிப்பதில் அதிக கவனம் எடுத்தார். இவரது நாடகத் தயாரிப்புகளில் நடிகர்களிற்கு பிரத்தியேகமான பயிற்சிகளும், ஒத்திகைகளும் நடாத்தப்பட்டன.*

*இவ்வாறாகவே ஐரோப்பாவின் உயர்கல்வி நிறுவனங்களிலும் நாடக கற்கைநெறி, இலக்கியம் கற்றலின் ஒரு பகுதியாக அறிமுகம் செய்யப்பட்டது. ஐரோப்பாவில் ஆரம்ப கால நாடகக் கற்கைநெறி, நாடகங்களும் அதன் சமூகத் தொடர்புகளும் பற்றிய அறிதலாகவே காணப்பட்டது. நாடக அரங்கத்துறை செயன்முறைப் பயிற்சி வழங்கும் நோக்குடன் செயற்படவில்லை (சைமன் சபேட், மைக் வெயில்ஸ்: **2010).**பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியம் கற்ற மாணவர்கள், தமது நாடக ஈடுபாடு காரணமாக இங்கிலாந்தில் நாடகப் பயிற்சி பெற்றனர். ஐராங்கனி சேரசிங்கா, ஏனெஸ்ட் தளையசிங்கம் மைக்கன்ரயர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இங்கிலாந்தில் பிறிஸ்டல் பல்கலைக்கழகத்திலேயே **(Bristal University)** முதன்முதலில் நாடகமும் அரங்கக்கலைகளும் கற்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பாக இயங்கிய 'ஓல்ட் விக்' **(Old Wig)** நாடகப் பயிற்சிப் பள்ளியில் குரல் தொடர்பாக சிறப்புப் பயிற்சி பெற்றவர் ஐராங்கனி சேரசிங்கா. அத்துடன் 'றோயல் அக்கடமி ஒப் றமரிக் ஆட்' **(Royal Academy of Dramatic Art)** எனும் நாடகக் கல்விக்குப் புகழ் பெற்ற நிறுவனத்திலும் இவர் பயிற்சி பெற்றவர். ஐராங்கனி சேரசிங்க மற்றும் ஏனெஸ்ட் தளையசிங்கம் மைக்கனரயர் போன்றவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வெளியே நாடகப் பயிற்சிகளை வழங்கத் தொடங்கினர். நாடகப் பயிற்சிகளின் நவீன நிறுவனக் கல்விக்குரிய கற்றல் - கற்ப்பித்தல்; தொடர்பான மேலைத்தேய முறைமைகளை அறிமுகப்படுத்தினர். கொழும்பை மையமாகக்*

கொண்ட மத்தியதர, உயர் மத்தியதர வர்க்கத்தினர் இந்தப் பயிற்சிகளில் கலந்து கொண்டனர்.

*பொரளை அக்குவனஸ் கல்லூரியில் **(Aquinas College)** இரண்டு வருட நாடக டிப்ளோமா பயிற்சிநெறிக்கு ஏனெட்ஸ்ட் தளையசிங்கம் மக்கன்ரயர் தலைவராக இருந்தார். பிரிட்டனில் உள்ள சதம்ரன் பல்கலைக்கழகம் **(Southampton University)** மற்றும் அமெரிக்காவிலுள்ள 'பேக்லி கொலிச்' **(Berkley College)** என்பவற்றில் பணியாற்றிய விரிவுரையாளர்கள் அக்குவனஸ் கல்லூரியில் பயிற்சி வகுப்புகளை நடாத்தினார்கள். மக்கன்ரயர் தனிப்பட்ட ரீதியாக நட்பு வைத்திருந்த நாடகக் கலைஞர்களை பிற நாடுகளிலிருந்து வரவழைத்து நாடகப் பயிற்சிகளைக் கொடுத்து இலங்கையில் நாடகங்களைச் செழுமைப்படுத்தினார். இலங்கையில் நவீன நாடகப் பயிற்சிகளது ஊற்று மக்கன்ரயரிடமிருந்துதான் வருகிறது. இவர் கொழும்பில் நடாத்திய நாடகப் பயிற்சிகள் தமிழ், சிங்கள அரங்கிற்கான வளவாளர்களை உருவாக்கியது. அக்குவனஸ் கல்லூரியில் பயிற்சி பெற்ற தமிழர்களில் ஈழக்கூத்தன் ஏ.சி தாசீசியஸ் அவர்களும் ஒருவர். நவீன அரங்கின் தயாரிப்பு நுட்பங்களும், பயிற்சி முறைமைகளும் நவீன தமிழ் நாடகத்துறைக்கு இவரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அத்துடன் தமிழ்ப் பண்பாட்டு ஆற்றுகை முறைமைகளிலிருந்தும் மேலைத்தேய நாடக, அரங்க அனுபவங்களையும் முறையியலாகக் கொண்டு நாடகங்களிற்கான 'புதிய' பயிற்சி முறைகளை இவர் உருவாக்கினார். தமிழ்ப் பண்பாட்டிலுள்ள ஆற்றுகைகளையும் கூத்து மரபுகளையும் அடிப்படையாகக் கொண்டு தற்புதுமையான தமிழ் நாடகங்களையும் உருவாக்கியவர். ஈழக்கூத்தன் ஏ.சி தாசீசியஸ் அவர்களால் கொழும்பில் அறுபது, எழுபதுகளில் நெறியாள்கை செய்யப்பட்ட தமிழ் நாடகங்கள் வாயிலாக நாடகக் கற்கைநெறியின் உலகளாவிய சிந்தனை மரபுகள் தமிழ் அரங்கிற்கு கொண்டு வரப்பட்டன.*

யாழ்ப்பாணத்தில் நாட கக் கற்கைநெறி

*ஆங்கில நாடகங்கள் மற்றும் சுதேசிய நாடகங்கள் பாடசாலைகளில் மேடையேற்றப்பட்டன. நாடகங்கள் மேடையேற்றுவதற்கு தயர்ப்படுத்துவதாக மட்டுமே இருந்தன. நடிகர்களிற்கான பிரத்தியேகமான பயிற்சிகள் வழங்கப்படவில்லை. **1960**களில் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் நிர்வாகத்தின் கீழ் 'கலாமன்றம்' எனும் அழகியற் கல்வி போதிக்கும் நிறுவனம் இயங்கி வந்தது. இங்கு நாடகப் பயிற்சிகளும் நடைபெற்றன. இந்*

*நிறுவனத்திற்கு கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் தலைவராக இருந்தார். இலங்கையில் நாடகக் கற்கைநெறியினை வழங்கிய நிறுவனங்கள் பற்றிய விபரம் உரு-**1**இல் காட்டப்பட்டுள்ளது.*

*கொழும்புப் பல்கலைக்கழகம் நாடகமும் அரங்கக் கலைகளும் பட்டப் பின்-டிப்ளோமா கற்கை நெறியினை **1976** இல் நடாத்தியது. இந்தப் பயிற்சி நெறியினூடாக நாடக ஈடுபாடு கொண்ட தமிழர்கள் கொழும்பில் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றனர். இங்கு நடைபெற்ற நாடகப் பயிற்சிகளால் உந்துதல் பெற்றார் குழந்தை ம.சண்முகலிங்கம். நாடகத்தை கல்வி முறையாக வழங்குவதனை பிரதான நோக்கமாகக் கொண்டு, **1978** இல் இவர் யாழ்ப்பாணத்தில் நாடக அரங்கக் கல்லூரியை நிறுவினார். ஏ.சி.தாசீசியஸ் அவர்களுடன் இவருக்கு அறிமுகம் ஏற்ப்பட்டது. நாடக அரங்கக் கல்லூரியில் நாடகப் பயிற்சிகளை வழங்குவதற்காக ஈழக்கூத்தன் ஏ.சி.தாசீசியஸ் அவர்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரவழைக்கப்பட்டார். இவர் தமிழ் மரபில் நாடகத்தினை ஒரு கற்கை நெறியாக அறிமுகபடுத்தினார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தாசீசியஸ் அவர்கள் பேராசிரியர் லுடோவிக் மற்றும் மக்கன்ரயரிடம் மேலைத்தேய முறைமையிலான நாடகப் பயிற்சி பெற்றவர். இலங்கையின் தமிழ் பிரதேச கூத்து வடிவங்களை ஆய்வு செய்து இலங்கை வானொலியில் மூன்று வருடங்களிற்கு மேலாக கூத்து தொடர்பான நிகழ்ச்சிகளை நடாத்தினார். சிங்கள நாடக ஆளுமைகளுடன் இணைந்து சிங்களப் பகுதிகளுக்கும் சென்று பயிற்சிகளை நடாத்தியிருந்தார். சுதேச மரபும் மேலைத்தேய மரபும் இணைந்த தற்புதுமையான நாடகப் பயிற்சி முறைமையினை வடிவமைத்து, இவர் நாடக அரங்கக் கல்லூரியில் பயிற்சிகளை வழங்கினார். நாடக அரங்கக் கல்லூரியில் நடைபெற்ற பயிற்சிகளின் மூலமாக நவீன தமிழ் அரங்கிற்கு நாடகப் பயிற்சியை அறிமுகப்படுத்தினார். தாசீசியஸ் அவர்கள் நாட்டின் சூழல் காரணமாக புலம்பெயர்ந்தார். இதன் காரணமாக தமிழ் நாடகமும், நாடகத்தின் உயர் கல்வித்துறையும் இவரது நாடகப் பயிற்சிகள் ஆழமாக சுவறுவதற்கான வாய்ப்பை இழந்தது. இவரது நாடகப் பயிற்சிகளும் நாடகத் தயாரிப்புகளும் புலம்பெயர் நாடுகளில் தொழில்முறை நாடகர்களை வளம்படுத்தியது.*

இலங்கையில் உயர் கல்வியில் நாடகமும் அரங்கக் கலைகளும் - பேராதனைப் பல்கலைக்கழகம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கீழைத்தேயக் கற்கைகள் பீடத்தின் மொழித்துறைகள்: ஆங்கில, தமிழ், சிங்களம், சுதேச நாடகங்களின் எழுச்சிக்கும் மீள் கண்டுபிடிப்பிற்கும் வித்திட்டன. கலைத்திட்டத்திற்கு அப்பாலான வெளிக்கள செயற்பாடுகளாகவே நாடகங்கள் பல்கலைக்கழகத்தில் தயாரிக்கப்பட்டு ஆற்றுகை செய்யப்பட்டன.

***1930**களில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து செயற்பட்ட 'டறம்சொக்' நாடக மன்றத்தின் செயற்பாடுகளால், நாடக ஈடுபாடு கொண்ட பட்டதாரிகள் அறுவடையாகக் கிடைத்தனர் என்பது முக்கியமானது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 'சிங்கள நாடக வட்டம்' சிங்கள மொழித்துறையில் செயற்பட்டது. சரத்சந்ரா மற்றும் லுடோவிக் ஆகியோரது தலைமையில் இவ்விரு அமைப்புகளும் ஆங்கில நாடகங்களைத் தயாரித்தன. பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிங்களத்துறையின் 'சிங்கள நாடக வட்டம்', தமிழ்த்துறையின் 'தமிழ்ச் சங்கம்' ஆகியன சுதேச நாடகங்களின் மீள் எழுச்சிக்கு வித்திட்டன. சுதேச மரபுகள் சார்ந்த நாடகங்களை உயர் கல்வி நிறுவனங்களில் நிகழ்த்துவதற்கு இந்த நாடக செயற்பாடுகள் வித்திட்டன. இலங்கையில் இனரீதியாக மேலெழுந்த தேசிய உணர்வு கலைகளின் பயில்வுகளிலும், கல்வியிலும் பெரும் செல்வாக்குச் செலுத்தியது. இந்தச் சிந்தனைகள் கலை வடிவங்களாக உருவாக்கம் பெறுவதற்கு களமாக அமைந்தது பேராதனைப் பல்கலைக்கழமாகும்.*

அறுபதுகளில் சிங்கள மொழித்துறையில் சரத்சந்திரா அவர்களின் நாடகத் தயாரிப்புகள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தனவாக கருதப்பட்டன. சரத்சந்திரா அவர்கள் காலனித்துவம், சிங்களத் தேசியவாதம் மற்றும் மறுமலர்சிச் சிந்தனைகள் என்பவற்றின் செல்வாக்கிற்குட்டவர். இலங்கையின் நிலைமாறு காலத்தின் பிரவாகமாக புதிய போக்குகளை உருவாக்கியவர். இவர் விரிவுரையாளர், கலைஞர், காலனித்துவக் கல்வி மற்றும் சிங்கள, பாளி மொழியறிவு என்பனவும் சாந்தினிகேதனில் இரண்டு வருடங்கள் கல்வி கற்றமை, ஐரோப்பாவில் கல்வி கற்ற அனுபவம் என்பன சரத்சநதிராவின் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தின. உள்ளூர், பிராந்திய மரபுகளையும் உலக நாடக அனுபவங்களையும் ஒருங்கிணைத்து சிங்கள தேசிய அரங்கினை தன்னுணர்வு பூர்வமாக வடிவமைத்தார் சரத்சந்திரா.

*ஐம்பதுகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்து பேச்சு மொழியில் நாடகங்களைத் தயாரித்தார். அவரைத் தொடர்ந்து பேராசிரியர் சு.வித்தியானந்தனும் தமிழர்களிடையே நன்கு வழக்கிலிருந்த பாரம்பரியக் கூத்துக்களை பல்கலைக்கழக மாணவர்களை வைத்துத் தயாரித்து மேடையேற்றினார். சிங்கள, ஆங்கிலத்துறையினரின் நாடகங்கள் 'இலங்கை நாடகங்கள்' என்ற தேசியவாதச் சிந்தனையின் பிரதிபலிப்பாக இருந்தது. தமிழ்த்துறையின் நாடகங்கள் 'இலங்கைத் தேசியவாதம்' என்பதிலிருந்து விலகி, 'தமிழ்த் தேசியவாதம்' நோக்கி செயற்படத் தொடங்கியது (மைக்கேல் றொபேட்ஸ்:**1979**). இக் காலப்பகுதியில் வலுவடையத் தொடங்கிய இன முரண்பாடுகளின் பிரதிபலிப்பாக இவை இருந்தன.*

தமிழில் நாடகம் தொடர்பான ஆய்வுகள் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் நடைபெற்றன. இவை நாடகப் பனுவல்களை அடிப்படையாகக் கொண்டவை. நாற்பதுகளில் முதற் தமிழ்ப் பேராசிரியர் விபுலானந்த அடிகள் அவரைத் தொடர்ந்து பேராசிரியர் கிங்ஸ்பெரி தேசிகர் ஆகியோர் முறையே ஆங்கில, சமஸ்கிருத நாடகப் பனுவல்களை தமிழில் உயர் கல்வித் துறையில் அறிமுகம் செய்தனர். பேராசிரியர் கணபதிப்பிள்ளை யாழ்ப்பாணத்து பேச்சு மொழியில் நாடகம் எழுதி, தயாரித்து உயர் கல்விப் பீடத்தில் 'தமிழ் நாடகம்' எனும் சிந்தனையை உருவாக்கினார். இவரைத் தொடர்ந்து பேராசிரியர் வித்தியானந்தன் தமிழர்களின் அரங்க மரபான கூத்துக்களைத் தயாரித்தும் அவை தொடர்பான ஆய்வு மாநாடுகளை நடாத்தியும் உயர் கல்விப் புலத்தினுள் கூத்து தொடர்பான சிந்தனை மரபுக்கு வித்திட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - ஆற்றுகைக் கலைகளின் கற்கைநெறி

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் **1974** இல் வளாகமாக நிறுவப்பட்டது. **1979** ஆம் ஆண்டு பிராந்தியம் சார்ந்த கற்கைகளை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கையிலுள்ள வளாகங்கள் தரம் உயர்த்தப்பட்டபோது, யாழ்ப்பாண வளாகமும் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப்பட்டது. கலைப்பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கத்தின் தொடக்க கால பீடங்களில் ஒன்றாகும். கடந்த நாற்பத்தைந்து வருடங்களாக பிராந்திய, பாரம்பரிய, கலாசார பின்னணிகளோடு*

*தனித்துவமாக, இயங்கி வருகிறது. **1982** இல் நுண்கலைத்துறை நிறுவப்பட்டது.*

உள்ளூர்க் கலைகளை மேம்படுத்தும் அரசாங்க வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக அழகியற் பாடக்கற்கைநெறிகள் பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்டன. ***1960*** *இல் தொடக்கப்பட்ட இராமநாதன் நுண் கலைக்கழகம்,* ***1975*** *ஆம் ஆண்டு யாழ்ப்பாண வளாகத்துடன் இணைக்கப்பட்டது. இதே போன்று 'மருதானை தொழில்நுட்பக் கல்லூரி', களனிப் பல்கலைக்கழகத்துடன் 'கொழும்பு அழகியற் கற்கை நிறுவனம்' என்ற பெயரில் இணைக்கப்பட்டது. இவை முதன் முதல் 'பட்டயச் சான்றிதழ்'* ***(diploma certificate)*** *வழங்கும் கற்கை நெறிகளாக அறிமுகப்படுத்தப்பட்டன.*

1982 *ஆம் ஆண்டு அழகியற் கலைகளின் பேணுகைக்கும் மேம்பாட்டிற்குமான நோக்குடன் யாழ்ப்பாணம், களனி ஆகிய பல்கலைக்கழகங்களில் நுண்கலைத்துறை தொடங்கப்பட்டது. இராமநாதன் நுண் கலைக்கழகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண் கலைத்துறையுடன் இணைக்கப்பட்ட போது பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் நுண் கலைத்துறையின் முதலாவது தலைவராக செயலாற்றினார். தொடர்ந்து கைலாசநாதக்குருக்கள் தலைவராக நியமிக்கப்பட்டார்.* ***1984*** *இல் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் நுண் கலைத்துறையின் தலைவராகப் பொறுப்பேற்றார்.* ***1985*** *ஆம் ஆண்டு நுண்கலை (தற்போது கலைவரலாறு) கற்கைநெறியும்,* ***1986*** *இல் நாடகமும் அரங்கக்கலைகளும் கற்கைநெறியும் இவரால் அறிமுகப்படுத்தப்பட்டன.* ***1991*** *இல் நாடகமும் அரங்கக்கலைகளும் வெளிவாரிப் பட்டப்படிப்பு இங்கு ஆரம்பிக்கப்பட்டது.*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண் கலைத்துறை, இலங்கையில் மட்டுமன்றி தென்னாசியாவில் தமிழ் மொழி மூலம் அழகியற் கற்கைநெறியினை வழங்கும் முன்னோடி நிறுவனமாகப் பரிணமித்தது. உரு-**1** இல் காட்டப்பட்டவாறு, நுண்கலைத்துறைக் கற்கைநெறிகள் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களில் தொடங்கப்பட்டன.* ***1991*** *இல் யாழ்ப்பாணப் பல்கழகத்திலிருந்து கிழக்குப் பல்கலைக்கழகத்துக்குச் சென்ற பேராசிரியர் சி.மௌனகுரு நாடகமும் அரங்கக்கலைகளும் கற்கைநெறியை அங்கு அறிமுகப்படுத்தினார். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கூத்து மற்றும் பிராந்திய ஆற்றுகை வடிவங்களின் செயன்முறை கலைத்திட்டத்தினுள் இணைத்துக் கொள்ளப்பட்டது.* ***2007****இல் சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கை நிறுவனத்தில் செயன்முறையை பிரதானமாகக் கொண்டு நாடகமும் நடனமும் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டது.*

நாடகமும் அரங்கக்கலைகளும் கற்கைநெறி - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ், சிங்கள மொழிகளில் நாடகங்கள் தயாரிக்கப்பட்டபோதும் அவை பாடத்திட்டத்தில் இணைக்கப்படவில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கக்கலைகளும் கற்கைநெறி அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னரே, தமிழ்த்துறையில் ***(Department of Tamil)*** *'தமிழ் நாடக வரலாறு' என்ற பாட அலகு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் மாணவர் அமைப்பான 'தமிழ்ச் சங்கம்' நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியது.*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் 'நாடகமும் அரங்கக் கலைகளும்' அறிமுகப்படுத்தப்பட்டபோது, ஏற்கனவே இருந்த தமிழ்த்துறையின் 'தமிழ் நாடக வரலாறு' பாடத்திட்டத்தின் கோட்பாடு, நாடக அரங்க வரலாறு போன்றவற்றின் சிந்தனைப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவே அறிமுகப்படுத்தப்பட்டது. யாழ் பல்கலைக்கழகத்தில் கோட்பாடும் அறிமுறையும் முதன்மைப்படுத்தப்பட்டிருந்தது. சமூகத்தின் கலை வெளிப்பாடுகளில் நாடகம் பல்வேறு வடிவங்களிலும் ஏனைய கலைகளோடும் இணைந்த செயல் வடிவ ஆற்றுகைக் கலையாக இயங்கியது.

நாடகம் பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட போது 'நாடகம்', 'அரங்கு' என்பன தொடர்பான புரிதலில் கருத்து வேறுபாடுகள் நிலவின. பாரம்பரியமாக ஒவ்வொரு சமூகமும் தமக்கான தனித்துவமான அரங்க வடிவங்களைக் கொண்டிருந்தது. மத்தியதர வர்க்கம் உரையாடலை முதன்மையாகக் கொண்ட நாடகங்களை தனதாக்கிக் கொண்டிருந்தது. இதன் காரணமாக நாடகம் என்றால் என்ன என்ற புரிதலில் பல கருத்து நிலைகளும் வாத விவாதங்களும் காணப்பட்டன. நாடகம் தொடர்பான இந்தச் சிந்தனைகள் அனைத்தையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வரும் புரிதலின் அடிப்படையில் உயர் கல்வி மரபில் 'நாடகமும் அரங்கக் கலைகளும்' என்று பெயரிடப்பட்டது. நாடகமும் அரங்கக் கலைகளும் என்ற பெயர் ஒரு புதிய, பரந்த சட்டகத்தினுள் நாடகத்தைக் கொண்டு வரும் முயற்சியாகும்.

ஐரோப்பாவிலும் உயர் கல்வி நிறுவனங்களில் நாடகக் கற்கைநெறி எழுத்துரு மைய **(text besed)** சிந்தனை கொண்டதாவே தொடக்க காலத்தில் இருந்தது. **1931**வரை அது நாடக இலக்கிய விமர்சகர்களின் கைப்பொருளாகவே காணப்பட்டது. கண நேரத் தோற்றப்பாடுடைய அழகியல் ஆற்றுகைகளையும் மேடையின் விரிகாட்சிகளையும் கைவிட்டு, பனுவல் எழுப்புகின்ற சமூக நிலமைகள் தொடர்பான வாதவிவாதங்களை எழுப்பக் கூடிய விமர்சனங்களை விமர்சகர்கள் முன்வைத்தனர். பிற்காலங்களிலேயே அரங்கினை அதன் ஆற்றுகைச் செழுமையுடன் அணுகும் விமர்சன முறை உருவாகியது **(Keir Elam,2008:04).** **1914** இல் அமெரிக்காவிலும் **1947** இல் இங்கிலாந்திலும் பல்கலைக்கழக பாடநெறியாக நாடகம் அறிமுகப்படுத்தப்பட்டது. நாடகம் என்பதனைப் புரிந்து கொள்ளுதலின் எல்லைகளின் பரப்பு மிகவும் அகண்டது. மேலைநாடுகளில் நாடகம், அரங்கு தொடர்பான கற்கைகள் வாத விவாதங்களின் பின்னரே தொடக்கப்பட்டது. இங்கிலாந்தில் பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தில் (**Bristol University)** முதலாவது நாடகத்துறை நிறுவப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இசை, நடனத்துறைகளில் நியமமாகப் பயிற்சி பெற்றவர்கள் விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டனர். பல்வேறு துறைகளில் பட்டம் பெற்ற நாடக ஈடுபாடுள்ளவர்கள் நாடக விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் நாடகக் கலைஞர்களாக அறியப்பட்டவர்கள். நாடகம் பற்றிய பல்வேறுபட்ட கருத்துநிலைகளைக் கொண்டவர்களின் சங்கமமாக நாடக விரிவுரையாளர் நியமனம் அமைந்தது. நாடகம் ஆசிரிய மையக் கல்வியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. நாடக வரலாறு: பேராசிரியர் சிவத்தம்பி, கலாநிதி காரை.செ.சுந்தரம்பிள்ளை; கூத்து: பேராசிரியர் சி. மௌனகுரு; நவீன நாடக மரபு: குழந்தை ம.சண்முகலிங்கம்; சமகால நாடகம்: கலாநிதி க.சிதம்பரநாதன்; நா.சுந்தரலிங்கம்: நவீன நாடகம், நடிப்பு, அரங்கக் காண்பியங்கள். இவர்களின் தனிப்பட்ட சிந்தனையும் செயற்பாடும் மாணவர்களின் நாடகமும் அரங்கக் கலைகளும் பற்றிய புரிதலுக்குள் செல்வாக்குச் செலுத்தியது.

நாடகக்கலைத்திட்டம் **(curriculum)** அறிமுறையை மையப்படுத்தியதாக அமைந்தாலும், வெளிக்கள நடவடிக்கையாக 'கலைவட்டத்தினரால்' நுண்கலைத்துறையில் நாடகங்கள் தயாரிக்கப்பட்டன. பட்டதாரி ஒருவரே பல்கலைக்கழக

விரிவுரையாளராக முடியும் என்ற காரணத்தினால், திறன் மிக்க நாடகக் கலைஞர்கள் பலர் பல்கலைக்கழகத்தினுள் விரிவுரையாளராவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இதனால் நாடகத்தின் செயல்முறை அறிவுப் பாரம்பரியத்தினை உயர்கல்வி கற்கும் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இருக்கவில்லை.

பல்கலைக்கழகத்தில் நாடகம் கற்பிப்பதற்கு ஆங்கில நூல்களே பெரிதும் வழிகாட்டிகளாக பயன்படுத்தப்பட்டன. ஆங்கில மொழிபெயர்ப்பின் பதங்களை தமிழில் சூழமைவுப்படுத்துவதில் தெளிவின்மை காணப்பட்டது. அத்துடன் செயன்முறை இல்லாத, பிற பண்பாட்டு நாடகங்கள், நாடக மரபுகள் செயன்முறை அனுபவமின்றி அறிமுறையாக மட்டும் கற்ப்பித்தமை, நாடகம் தொடர்பான புரிதலில் தெளிவின்மையை ஏற்ப்படுத்தியது. மேலைத்தேய மேலாண்மை நாடகத்தின் கல்வி சார் அணுகுமுறையில் பாரிய செல்வாக்குச் செலுத்தியது. உதாரணமாக 'பெட்டோல் பிறெக்ரின் நாடகங்கள் படச்சட்ட மேடையை உடைத்தன' என்பதைக் கூறலாம். மேலைத்தேய அரங்கின் படச்சட்ட மேடையையும் அதன் ஆற்றுகை தொடர்பான சூழமைவையும் புரிந்து கொண்டாலேயே இந்தக் கோட்பாட்டினை சரியாகப் புரிந்து கொள்ள முடியும். இந்த இடத்தில் காலனித்துவத்தின் திணிப்புத் தொடர்பாக ரவீந்திரநாத்தாகூரின் கூற்று கருத்திற் கொள்ளப்பட வேண்டியது. "துரதிஸ்டவசமாக உங்களுக்கு வந்து சம்பவித்த சில சம்பவங்களின் பயனாய் நீங்கள் உங்கள் பழமையையும் மறந்து, அத்துடன் அமையாது உமது ஆன்றோர் ஈட்டி வைத்த செழுங்கலைச் செல்வங்களையும் முதுசொத்தையும் உங்களுடையது அல்ல என்று கூறவும் தயாராகியிருக்கிறீர்கள்" **(சனாதனன், 2021)** 'கிரேக்கம் உலக நாடகத்தின் தொட்டில்,'கிரேக்கத்திலேயே முதன் முதலில் நாடகம் உருவாகியது' என்ற கருத்துக்கள் ஆங்கில நூல்கள் வாயிலாக தமிழிற்குக் கொண்டு வரப்பட்ட மேலாண்மைச் சிந்தனை முறைகள் ஆகும். மேலை நாட்டுக் கல்வியாளர்கள் கீழைத்தேய சடங்குகள், திருவிழாக்கள் என்பவற்றை அவர்களின் நோக்கு நிலையில் ஆய்வு செய்து, ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள். பின்னர் இவை தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு கல்விப் பீடங்களில் கற்ப்பிக்கப்படுகிறது. இதனால் மேலைத்தேய கோட்பாடுகளால் தமிழ் நாடகங்களை அளவீடு செய்யப்படுகின்றன. இவை நாடகம் பற்றிய புரிதலில் குளப்பத்தை ஏற்படுத்துகின்றன. நாடகமும் அரங்கியலும் தொடர்பான விடயங்களும் கலைச் சொற்களும் ஆங்கில சூழமைவிலிருந்து தமிழில் மொழி மாற்றம் செய்யும் போது 'சொற்களால் ஒட்டுதல்', சுதேச கலை மரபுகளின் புரிதலிலிருந்து

நாடகத்தை அன்னியப்படுத்தியது. எடுத்துக்காட்டாக கூத்து 'ஒப்பேரா' என்று ஒப்பிட்டுக் கூறி 'கூத்து ஒப்பேரா' என்ற சொல்லுருவாக்கம் பொருள் மயக்கத்தை ஏற்ப்படுத்துகிறது.

நாடகமும் அரங்கக் கலைகளும் கலைத்திட்டம் - வரலாற்றுப் பின்புலமும் கலைத்திட்ட** மறுசீராக்கமும் **(curriculum revision)

*நாடகம் என்பது உரையாடல் சார்ந்தது என்பது ஆங்கிலக் கல்வி மரபின் வழியாக வருவோரின் சிந்தனையாக இருந்தது (திருகந்தையா, **1971).** உயர் கல்வி என்ற நிலையில் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கருத்தும் நாடகக் கலைத்திட்டத்தினை வடிவமைப்பதில் செல்வாக்குச் செலுத்தியது. 'உண்மையில் நமது பாரம்பரிய அரங்கு (கூத்து முறைமை) எழுத்தறிவற்ற நிலையிற் பயிலப்படுவதாகும் **(nonliterate level).** இப்பொழுது அது எழுத்தறிவு மட்டத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. இன்று பாரம்பரிய அரங்கில் ஏற்படும் மாற்றங்கள் இந்த மட்ட வேறுபாடுகளை அகற்றுவனவே' என்ற சிந்தனையும், "நாடக பாடத்தின் நோக்கம் மனிதனை விளங்கிக் கொள்ளும் புலமை முயற்சி, இரண்டாவது நோக்கம் ஆற்றுதல் மூலமும் அதற்கு வேண்டிய சூழலை உண்டாக்குவதன் மூலமும் மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்கும் முயற்சியாகும்" **(சிவத்தம்பி,1996:10)** எனக் குறிப்பிடுவது நாடகம் பற்றிய அவரது சிந்தனையைத் தெளிவுபடுத்துகிறது. இந்தச் சிந்தனையின் பிரதிபலிப்பாகவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடகக் கற்கைநெறியின் தொடக்ககாலக் 'கலைத்திட்டம்' வடிவமைக்கப்பட்டது. இதனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகம் 'எழுத்தை' முதன்மைப்படுத்திய கற்றல் புலமாகவே காணப்பட்டது.*

*பேராசிரியர் சிவத்தம்பி, குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோர் கலைத்திட்ட விதானிப்பினை மேற்கொண்டனர். தொடக்க கால கலைத்திட்டம் அரங்க வரலாறு, கோட்பாடு முதன்மையாகவும் செயன் முறை சிறிய பகுதியாகவும் வடிவமைக்கப்பட்டது. செயல்முறையில் நடிப்பு, அரங்கக் காட்சி விதானிப்பு, இரண்டு நாடகங்கள் தயாரித்தல் என்றவாறு காணப்பட்டது. நாடகத் தயாரிப்புகளில் ஒத்திகைகளே பயிற்சிகள் என்ற புரிதலுடன் அவை நடைமுறைப்படுத்தப்பட்டன. நாடகமும் அரங்கக் கலைகளும் கலைத்திட்ட மறுசீராக்கங்களின் போது காணப்பட்ட பாட அலகுகளின் மாற்றம் தொடர்பான விபரம் உரு-**1** இல் காட்டப்பட்டுள்ளது.*

நாடகமும் அரங்கக் கலைகளும் கலைத்திட்ட மறுசீராக்கம்

நாடகமும் அரங்கக் கலைகளும் கலைத்திட்டம் செயன்முறையினை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது தொடர்பாக மாறுபட்ட கருத்துகள் எதுவும் இருக்கவில்லை. காலத்துக்குக் காலம் நடைபெற்ற பாடத்திட்ட மறுசீராக்கங்களில் செயன்முறைப் பாட அலகுகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது வலியுறத்தப்பட்டது.

*தமிழில் நாடகம் என்பது அழகியல் ரசனைக்குரியது என்பதை விடவும், அது சமூக, அரசியல் செயற்பாடுகளை விமர்சிப்பது என்ற வகையில் புகழ் பெற்றிருந்தது. 'நல்ல கருத்துள்ள கதைகளை நாடகமாகச் செய்வதற்கு பயிற்சி அவசியமில்லை' என்றும் 'யாரும் நாடகம் செய்ய முடியும்' என்ற கருத்துக்கள் பரவலாகக் காணப்பட்டது. இவற்றிற்கு அப்பால் 'பரம்பரையாக நாடகத் திறன் கொண்டவர்கள் திறமையாகச் செயற்படுவர், இயற்கையான ஆற்றலுடையவர்கள் நாடகத்தில் ஈடுபட முடியும் என்றும் படிப்படியாக செயன்முறை வளர்ச்சியடையும்' என்ற நம்பிக்கை நாடகக் கல்வித் துறையினரிடம் இருந்தது. இதுவும் ஒரு குல முறை, குருகுல முறை பயிற்சியின் சிந்தனை அடிப்படையிலிருந்து வருகிறது. இந்தக் கருத்துருவாக்கங்களை முறியடிக்கும் வகையில் 'நாடகத்திற்கான செயன்முறைப் பயிற்சி அற்ற நாடகக் கல்வி' என்ற விமர்சனம் காட்டமாக முன்வைக்கப்பட்டது. 'ஆற்றுகைக் கலை அதன் உயிரம்சமான ஆற்றுகையைக் கைவிட்டு வெறும் அறிமுறையாக அறிமுகம் செய்யப்பட்டதே அதன் வருகையில் நடந்த முரணாகும்' (அகிலன், **1998: 38**) எனக் கூறுவது இதனை உறுதி செய்கிறது. இதன் காரணமாக 'நாடகம் செய்யத் தெரியாத நாடகப் பட்டதாரிகள்' என்ற கடும் விமர்சனமும் முன்வைக்கப்பட்டது.*

***1986** ஆம் ஆண்டு விதானிக்கப்பட்ட நாடகக் கலைத்திட்டம் பின்னர் **2000** ஆம் ஆண்டிலேயே முதன் முதலில் மறுசீரமைப்புச் செய்யப்பட்டது. 'நாடகச் செயற்திட்டம்' என்னும் பாட அலகு நாடகத்தின் பல திறன்களை மேலும் விருத்தி செய்யும் நோக்கில் இணைக்கப்பட்டது. எனினும் நடைமுறையில், நாடகத்திற்கு அச்சாணியாக இருக்கும் உடல், குரல் சார்ந்த பயிற்சிகள் இன்றி, நாடகத் தயாரிப்பிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தில் பாடத் தெரிவு விதிகளின் அடிப்படையில் உப பாடங்கள் ஏனைய துறைகளிலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டது.*

2003 *மற்றும்* ***2012*** *இல் நடைபெற்ற கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது செயன்முறைப் பாடங்கள் அதிகரிக்கப்பட்டன (உரு-**1**).* ***2007*** *இல் க.பொ.த உயர்தரத்தில் நாடகமும் அரங்கியலும் செயன்முறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததால் மாணவர்களும் செயன்முறையில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கினர். எனினும் நாடகப் பயிற்சிகள் முறையியலுடன் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய நிலமை காணப்பட்டது.*

2020 *ஆம் ஆண்டு கலைத்திட்ட மறுசீரமைப்பு இலங்கையின் உயர் கல்வி தொடர்பான நியமங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இலங்கையின் உயர் கல்வித் துறையில் கலைத்திட்ட விதானிப்பு* ***(SBS,SLQF;)*** *என்பவற்றின் அறிவுறுத்தல்களும் பிரதானமாகக் கொள்ளப்பட்டன. நாடகமும் அரங்கக் கலைகளுக்குமான எஸ்.பி.எஸ்; நுண்கலைகள்* ***(2011),*** *ஆற்றுகைக் கலைகள்* ***(2010)*** *என்ற இரண்டிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டது. இவை 'இன்றைக்குப் பத்து வருடங்களிற்கு முன் எழுதப்பட்டுள்ளன. உலகில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்களில் இந்தப் பாடங்களின் கற்ப்பித்தல் தொடர்பான விடயங்களை விடவும் இதில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் மிகவும் பழமையானதாகக் காணப்படுகின்றன' (சௌமிய லியனகே,* ***2021).*** *இந்த எஸ்.பி.எஸ் இரண்டும் நாடகத்தின் உயர் கல்வி தொடர்பான அறிவுறுத்தல்களைத் தருகின்றன. ஆற்றுகைக் கலைகள் தொடர்பான சமகாலப் புரிந்து கொள்ளலின் தவறான விளக்கத்தின் அடிப்படையில் எஸ்.பி.எஸ் உருவாக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் முற்பகுதியில் குறிப்பிட்டது போன்று நாடகம் என்றால் என்ன என்ற எண்ணக்கரு ரீதியான சிந்தனைக் குழப்பம் எஸ்.பி.எஸ் இரண்டிலும் பிரதிபலித்திருக்கிறது.*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் அனைத்துக் கற்கைநெறிகளும் மேம்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில், ***2020*** *ஆம் ஆண்டு கலைத்திட்ட மறுசீரமைப்பு நிபுணத்துவ ஆலோசனையுடன் செய்யப்பட்டது. பேராசியர். சௌமிய லியனகே, ஈழத்தின் மூத்த நாடகக் கலைஞர் ஈழக்கூத்தன் ஏ.சி.தாசீசியஸ் ஆகியோர் நாடகமும் அரங்கக் கலைகளும் கற்கை நெறியின் மறுசீராக்கத்திற்கு* ***(2020)*** *நிபுணத்துவ ஆலோசனை வழங்கியிருந்தனர். இக் கலைத்திட்டம் முன்னரை விடவும் செயன்முறைத் திறன்களில் அதிக கவனம் செலுத்தியது. தமிழ்ப் பண்பாட்டில் காணப்படும் பாரம்பரிய ஆற்றுகை முறைகள், கூத்து என பாரம்பரிய அறிவு மரபுகள் புதிதாக*

இணைக்கப்பட்டன. உள்ளூர் மற்றும் பாரம்பரிய ஆற்றுகை முறைகள் நாடகப் பயிற்சியின் முறையிலாகவும் அறிமுகப்படுத்தப்பட்டது. அரங்க வரலாறு, கோட்பாடு என்பன எண்ணக்கருவினை அடிப்படையாகக் அறிமுகம் செய்யப்பட்டது. அரங்கக் காண்பிய விதானிப்பு, நாடகம் எழுதுதல், அரங்க முகாமைத்துவம் போன்ற அலகுகளில் தமிழ்ப் பாரம்பரியங்களிலுள்ள அம்சங்களும் இணைக்கப்பட்டுள்ளன. நாடகத் துறைசார் தொழிற் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் உள்நாட்டு, வெளிநாட்டு நாடகத் தொழில் முறைக் கலைஞர்களது வழிகாட்டலுடனான நாடகத் தயாரிப்பு, தொழில் முறை நாடகக் குழுவினருடனான பயிற்சி முதலிய பாட அலகுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்தக் கலைத்திட்டத்தின் செயன்முறைப் பாட அலகுகள் பிரதானமாகக் கீழைத்தேய, பிற பண்பாட்டு அரங்கப் பயிற்சி முறைகளின் ஒருங்கிணைப்பாக ஏ.சி.தாசீசியஸ் அவர்களின் வழிப்படுத்தலுடன் வடிவமைக்கப்பட்டது. இந்நிலையில் பிலிப்சரளியின் கருத்து பொருத்தமானது. 'மேலைத்தேயத்தவர் நாடக எழுத்துருவை அடிப்படையாகக் கொண்ட அரங்க மரபினைப் பிரதானமாகக் கொண்டனர். இந்தியா மற்றும் ஆசிய நாடுகளின் சுதேச பாரம்பரிய அரங்குகள் ஆற்றுகையை மையமாகக் கொண்டவை' **(Phillip Zarali and others, 2006:ixx).** இனங்கள் தமது அடையாளங்களைத் தேடிக் கண்டறியத் தொடங்கியபோது, சுதேச அரங்கு பற்றிய விடயங்கள் கலைத்திட்டத்தில் இணைக்கப்பட வேண்டும் என்ற புரிதல்கள் ஏற்படத் தொடங்கியது.

இந்தக் கலைத்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கு விரிவுரையாளர்கள் மேலும் துறைசார் நிபுணத்துவம் பெறவேண்டியுள்ளது. கலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான பௌதீகக் கட்டுமானம் மேம்படுத்தப்பட வேண்டிய உடனடித் தேவையும் காணப்படுகிறது.

முடிவுரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கக் கலைகளும் கற்கை நெறி மானுடக் கற்கைகள், சமூக விஞ்ஞானக் கற்கைகளோடு இணைந்த ஒன்றாக காணப்படுகிறதே தவிர ஆற்றுகைக் கலைகளுடனான தொடர்பு குறைவாக காணப்படுவது பலவீனமாக இருக்கிறது. நாடக அரங்ககக் கலைகளின் கற்கை நெறி கருத்தியல் ரீதியாக சமஸ்கிருத மேலாண்மை மற்றும் மேலைத்தேய மேலாண்மை என்ற இரு தளங்களிற்குள் சிக்குண்டிருப்பதால் தமிழர் சுதேச ஆற்றுகைக் கலைகள்

ஒதுக்கப்பட்டநிலை காணப்படுகிறது. நாடகக் கல்வியை 'மேல்நிலையாக்கம்' செய்தல் (சிவத்தம்பி.கா,1998:10), நாடகம் எனும் பாடத்தினை 'பரவலாக்கம்' செய்தல் (மௌனகுரு.சி,2004:12) என்ற சிந்தனைகளிற்கு அப்பால் இது ஒரு கலைப் பயிற்சியாக வளர்த்தெடுக்கப்பட வேண்டிய நிலை காணப்படுகிறது. ஆற்றுகையை முதன்மைப்படுத்தியதாக உயர் கல்விப் பாரம்பரியத்தில் நாடகம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

நாடகமும் அரங்கக் கலைகள் கற்கை நெறியில் உள்ளூர் கலைவடிவங்களை இணைத்தல் பற்றிய சிந்தனையும் விழிப்புணர்வும் மற்றும் மாற்று அரங்கு பற்றிய தேடல்களும் நாடகக் கற்கைநெறியில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றமை உலகப் பொதுவான விடயம். நாடகம், அரங்கு என்ற ஐரோப்பிய மையச் சட்டகத்தினுள் கீழைத்தேய அரங்குகளைப் புரிந்து கொள்வது முழுமை பெற்றுவிடாது. கீழைத்தேய ஆற்றுகை என்ற சொல் நாடகம், அரங்கு தொடர்பான புரிதலுடன் இறுக்கமான பிணைப்புப் பெறுகிறது. ***(that which is performed is Drama, and how it is performed the Theatre)*** *'நிகழ்த்தப்படுவது நாடகம் அது எவ்வாறு நிகழ்த்தப்படுகிறது என்பது ஆற்றுகை'* ***(சண்முகலிங்கம், 2017), '****நாடகம் என்பது அரங்கில் இயங்குதல்'* ***Drama is Theatre in action" (****தளையசிங்கம் மக்கன்ரயர்* ***2022),*** *'எந்தத் துறையிலும் முறையாகப் பயிற்சி பெற்றவர்கள்தான் அதனை வளர்த்தெடுக்க முடியும். கற்கை நெறி என்ற நிலையில் வெறும் 'அமெச்சூர்' பயிற்சிகள் அவ்வளவாக பயன் தராது'* ***(****ஆற்றுகை, தாசீசியஸ்:* ***1998)*** *என்ற இலங்கையின் மூத்த நாடக ஆளுமைகளின் புரிதல் நாடகமும் அரங்கக் கலைகளும் உயர்கல்வித்துறையில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது. உலகளாவிய ரீதியிலும் இது வலியுறுத்தப்பட்டது.* ***'New paradigm is performance, not theatre', theatre departments should become performance departments in order to realize their 'full potential role in the university….' - Richard Schechner(Association for Theatre in higher education (ATu;E) in 1992).***

'புதிய வடிவம் ஆற்றுகை, அரங்கு அல்ல. பல்கலைக்கழகங்கள் தமது பங்கினையும் முழுமையான ஆற்றலையும் உணர்ந்து, நாடக அரங்கத்துறையை ஆற்றுகை செய்யும் துறைகளாக மாற்றி அமைக்க வேண்டும்' ***(****றிச்சாட் செக்னர்* ***1992).***

செழுமை மிக்க கலை வரலாற்றுப் பின்புலத்திலிருந்து மேலெழும் ஆற்றுகைக் கலைகளின் உயர் கல்வியின் தரம் தொடர்பான விமர்சனங்களும் உரையாடல்களும் தற்போது இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாடகமும் அரங்கக் கலைகளின் கல்வியின் மேம்பாடு தொடர்பான விரிவான ஆய்வுகள் மேலும் நிகழ்த்தப்பட வேண்டும். கலைப் பயிற்சியும் கலைப் படைப்பாக்கமும் நாடகத் துறையின் நிலைபேற்றிற்கும் ஆழ்ந்து அறிதலிற்க்கும் ஆதாரமாக இருக்கும்.

மூலம்: ஆய்வாளரின் உருவாக்கம்,2022

உரு 01 : இலங்கையில் ஆற்றுகை கலைகள்



துணை நூல் பட்டியல்

Akinola, G. A. (2004) *A handbook of drama*. Nigeria, Ise-Ekiti: Oluwasola Press.

Axworthy, G. (1985) 'The challenges and prospects of teaching and learning dramatic arts in tertiary institutions in Nigeria', *An International Multidisciplinary Journal*, 9(3), pp. 113-123. doi: http://dx.doi.org/10.4314/afrrev.v9i3.10

Quality Assurance Council, University Grants Commission. (2010) *Benchmark statement in performing arts*. Available at: https://www.eugc.ac.lk/qac/downloads /SB/SBS-Performing-Arts.pdf. (Accessed: 16 July 2022).

Chandradasan. (2009) 'The politics of western pedagogy in the theatre of India', in Margolis, E. and Renaud, L. T. (eds.) *The politics of American actor training*. New York: Routledge, pp. 54 – 69.

Coggin, P.A. (1956) 'Drama *and education': an historical survey from ancient Greece to the present day*. Available at: https://archive.org/ details/usesofdramahisto 00coggrich/page/n5/mode/2up (Downloaded: 25 June 2022).

Gooneratne, Y. (1971) 'Ceylon', The *Journal of Commonwealth Literature,* 6(2), pp. 67–72. https://doi.org/10.1177/002198947100600209

Kandiah, T. (1971) 'Tamil drama of Ceylon: a tradition Usurped', *South Asian Review*, VI(1), pp. 29-39.

Michel, R. (ed.) (1979) *Collective identities: nationalisms and protest in modern Sri Lanka*. Colombo: Marga Institute.

Liyanage, S. (2020) 'Why aesthetic education needs a breakthrough in Sri Lankan universities', *Colombo Telegraph*, 02 November, Available at: https://www.colombotelegraph.com /index.php/why-aesthetic-education-needs-a-breakthrough-in-sri-lankan-universities/ (Accessed: 25 June 2022).

Zerilli, P. B. et al. (2006) *Theatre histories: an introduction*. New York and London: Routledge.

Simon, S. and Mick, W. (2010) Drama *and / theatre/ performance*. London and New York: Routledge.

Schechner, R. (1992) 'A new paradigm for theatre in the academy', *The Drama Review*, 36(04), pp. 7-10.

Matasci, D., Jeronimo, M. B. and Dores, H. G. (eds.) (2020) *Education and development in colonial and postcolonial Africa*. Available at: https://library.oapen.org/bit stream/id/31bff8ef-d42b-4ebd-aee0-ff03fd0a438b/1007147.pdf. (Downloaded: 15 April 2022).

*அகிலன், பா. **(1998)** 'கற்கைநெறியாக அரங்கு: திரைகளை விலக்கிச் சில கேள்விகள்", ஆற்றுகை: நாடக அரங்கியலுக்கான இதழ், சிறப்பிதழ் **1997 – 1998, பக். 36-44.***

*சனாதனன்.தா **(2021)** தாகூரின் யாழ்ப்பாணவருகை- கலை, அடையாளம், கருத்தாடல், சென்னை: குமரன் புத்தக இல்லம்*

*சிவத்தம்பி, கா. **(1996)** கற்கை நெறியாக அரங்கு. சென்னை: நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்*